Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், ஜனவரி 08, 2025 | இதழ் 270

# அண்ணா பல்கலைக்கழக சம்பவம் குற்றவாளி யாராக இருந்தாலும் உச்சபட்ச தண்டனை வாங்கித் தருவோம்

## சட்டசபையில் ஸ்டாலின் உறுதி அரசியல் லாபத்துக்காக மலிவான செயலில் ஈடுபடாதீர் என அ.தி.மு.க.வுக்கு எச்சரிக்கை

*சென்னை, 08 ஜனவரி 2025:* அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் குற்றவாளி யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுப்போம்; உச்சபட்ச தண்டனை கிடைக்க செய்வோம் என சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சென்னையில் அண்ணா பல்கலைக்கழக மாணவி ஒருவர் மீது நடைபெற்ற பாலியல் வன்கொடுமை தொடர்பாக அ.தி.மு.க. உட்பட பல்வேறு கட்சிகள் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

இங்கே கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பல்கலைக்கழகத்தினுடைய பெயரைச் சொல்லி நீங்களெல்லாம் பேசியிருக்கிறீர்கள். ஆனால், நான் அந்தப் பல்கலைக்கழகத்தின் பெயரைச் சொல்லி, அந்தப் பெயருக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால், எங்களையெல்லாம் ஆளாக்கியவர் அவர். அந்த உணர்வோடு, அந்தப் பெயரைத் தவிர்த்து, இங்கே பதிலளிக்க விரும்புகிறேன்.

சென்னையில் ஒரு மாணவி மீது நடத்தப்பட்டிருக்கக்கூடிய பாலியல் வன்கொடுமை என்பது மாபெரும் கொடூரம். அதை யாராலும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இது குறித்து, உறுப்பினர்கள் ஜெகன்மூர்த்தி, வேல்முருகன், ரா.ஈஸ்வரன், சதன் திருமலைக்குமார், மாரிமுத்து, நாகைமாலி, சிந்தனைச்செல்வன், எம்.ஆர்.காந்தி, ஜி.கே.மணி, கு.செல்வப்பெருந்தகை, ஆர்.பி.உதயகுமார் ஆகியோர் கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துப் பேசி இருக்கிறீர்கள்.

இது குறித்து உண்மையான அக்கறையோடு பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறீர்கள். இதைப் பயன்படுத்தி இந்த ஆட்சியின் மீது தவறான எண்ணத்தை உருவாக்குவதற்காகவும் சில உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். சிலர் அல்ல; ஒரு உறுப்பினர் பேசியிருக்கிறார். யாருக்கு எந்த நோக்கம் இருந்தாலும், பாதிக்கப்பட்ட பெண் பக்கம் நின்று, அவருக்கு சட்டப்படி நியாயம் பெற்றுத் தரக்கூடிய காரியத்தைத் தவிர, தமிழ்நாடு அரசுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதைத் தெளிவாக, உறுதியாக, ஆணித்தரமாக முதலிலேயே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குற்றம் நடந்த பிறகு, ஒருவேளை குற்றவாளியை உடனடியாகக் கைது செய்யாமல் விட்டிருந்தாலோ அல்லது குற்றவாளியை காப்பாற்ற முடிவு செய்திருந்தாலோ அரசை நீங்கள் குறை சொல்லலாம். ஆனால், சில மணிநேரத்துக்குள் குற்றவாளியை கைது செய்தபிறகும், குற்றம் சம்பந்தப்பட்ட ஆதாரங்களை எல்லாம் திரட்டியபிறகும் அரசைக் குறை சொல்வது, அரசியல் ஆதாயத்திற்குத்தானே தவிர, உண்மையான அக்கறையோடு செய்யப்படுவது இல்லை என்று இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*24.12.2024* அன்று பிற்பகல் சென்னை மாணவி ஒருவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உடனடியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. உடனடியாக தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மறுநாள் காலையிலேயே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி ஞானசேகரன் காவல் துறையால் கைது செய்யப்பட்டார். இது காவல் துறை எடுத்த துரிதமான, சரியான நடவடிக்கை.



இருந்தாலும், எதிர்க்கட்சி என்ன குற்றச்சாட்டு சொல்கிறார்கள்? முதல் தகவல் அறிக்கை கசிந்தது தொடர்பாகப் பேசுகிறார்கள். அதற்குக் காரணம் யார்? ஒன்றிய அரசின்கீழ் செயல்படுகிற என்.ஐ.சி. (தேசிய தகவல் மையம்). அது நம்முடைய காவல் துறையால் உடனடியாக சுட்டிக்காட்டப்பட்டு, அதற்குப்பின்னால் அந்தத் தொழில்நுட்பக் கோளாறும் சரிசெய்யப்பட்டிருக்கிறது. அது தொடர்பாக அந்த நிறுவனமும் விளக்கம் கொடுத்து, என்.ஐ.சி.-யிலிருந்து கடிதமும் எழுதியிருக்கிறார்கள்.

அடுத்து, பாதுகாப்பு இல்லை; கேமரா இல்லை என்று பொத்தாம்பொதுவாச் சொல்கிற குற்றச்சாட்டில் உண்மையில்லை. சம்பவம் நடந்த வளாகத்தைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலிருந்த கண்காணிப்புக் கேமிராக்கள் உதவியோடு தான் குற்றவாளி அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மூன்றாவது குற்றச்சாட்டு, முதல் தகவல் அறிக்கை வெளியானதை வைத்துக்கொண்டு, “யார் அந்த சார்?” என்று கேட்கிறார்கள். உயர்நீதிமன்ற உத்தரவுப்படி நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழுதான் இப்பொழுது இந்தப் புகாரை விசாரிக்கிறார்கள். கைது செய்யப்பட்ட குற்றவாளி குண்டர் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

இந்தப் புலன் விசாரணையில் வேறு யாரேனும் குற்றவாளிகள் இருக்கிறார்களா என்பது தெரிய வந்தால், அது யாராக இருந்தாலும் சரி, மீண்டும் மீண்டும் சொல்கிறேன்; அது யாராக இருந்தாலும் சரி; அவர்கள் மீது தயவு தாட்சண்யமே இல்லாமல் காவல் துறை கடுமையான நடவடிக்கை எடுக்கும். இதை இந்த அவைக்கு 100 சதவீதம் உறுதியோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதில் எந்த மாற்றமும் கிடையாது.

அதுமட்டுமல்ல; இன்னும் முக்கியமானது, இந்த வழக்கில் விரைந்து விசாரணை மேற்கொண்டு, 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படும். அதோடு, சிறப்பு நீதிமன்றம் மூலம் இந்த வழக்கை விரைந்து விசாரிக்க அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து, குற்றவாளிக்கு உச்சபட்ச தண்டனை கிடைப்பதை இந்த அவைக்கு நான் மீண்டும் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எதிர்க்கட்சிகளைக் கேட்க விரும்புவது - “யார் அந்த சார்?” என்று சொல்லி குற்றம்சாட்டுகிறீர்கள். உண்மையாகவே உங்களிடம் அதற்கான ஆதாரம் இருந்தால், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அமைக்கப்பட்டிருக்கின்ற சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் சென்று அதைக் கொடுங்கள்; அதைச் சொல்லுங்கள். அதை யார் தடுக்கப் போகிறார்கள்? அதைவிட்டுவிட்டு, ஒரு மாணவி சம்பந்தப்பட்ட சென்சிட்டிவான வழக்கில் வீண் விளம்பரத்துக்காக, குறுகிய அரசியல் லாபத்துக்காக மலிவான செயலில் மீண்டும் மீண்டும் ஈடுபட வேண்டாம் என்று உங்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கும். இந்த ஒரு சம்பவத்தை வைத்து பெண்களுக்கு பாதுகாப்பே இல்லாமல் இருப்பது போல ஒரு சதித் தோற்றத்தை உருவாக்க பலர் முயற்சி செய்கிறார்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன்; இது மக்கள் மத்தியில் நிச்சயமாக எடுபடாது. ஏனென்றால், நமது அரசு பொறுப்பேற்றதிலிருந்து பார்த்திருப்பீர்கள் - பெண்கள் பாதுகாப்பிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். பெண்களுக்கு எதிரான குற்றங்களில் எவ்வளவு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். குறிப்பாக, பெண்களுக்கு எதிரான வழக்குகளில் 86 விழுக்காட்டிற்கு மேலாக, 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

* பள்ளிகள், கல்லூரிகள், பொது இடங்களில் பெண்கள் பாதுகாப்பைப் பற்றி 2 லட்சத்து 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கோம்.

* சத்யா என்ற பெண்ணை ரெயில் முன்பு தள்ளிவிட்டு கொலை செய்த வழக்கில் மிகக்குறுகிய காலத்திலே உச்சபட்ச தண்டனையாக தூக்குத்தண்டனை பெற்றுக் கொடுத்திருக்கிற அரசு இந்த அரசுதான்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்களுக்கு எதிராக இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பாராட்ட மனமில்லையென்றாலும் பரவாயில்லை - வீண்பழியைச் சுமத்தாமல் இருந்தால், அதுவே போதும். உயர்நீதிமன்றமே, எதிர்க்கட்சி வழக்கறிஞரைப் பார்த்து, “பெண்களின் பாதுகாப்பு தொடர்பான உண்மையான அக்கறையோடு செயல்படுவதை விட்டுவிட்டு, இந்த வழக்கில் ஏன் அரசியல் கண்ணோட்டத்தோடு செயல்படுகிறீர்கள்?” என்று கேட்டதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். நீதிமன்ற அறிவுரையைப் பின்பற்றி, வீண் அரசியலைத் தவிர்த்தாலே பெண்கள் பாதுகாப்பிற்குப் பேருதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாடு பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பான மாநிலமாகத் திகழ்கிறது. இந்த அரசு அமைந்ததிலிருந்து நாங்கள் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள்தான் அதற்குக் காரணம். இதுதொடர்பான ஒரு புள்ளிவிவரத்தையும் நான் சொல்ல விரும்புறேன்.

* இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான முதல் 10 மாநகரங்களில், நம்முடைய கோவையும், சென்னையும் இருக்கிறது.

* பெண்கள் அதிகம் பேர் வேலைக்குச் செல்லும் மாநிலமாக தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது.

* பத்து லட்சத்துக்கும் உட்பட்டிருக்கக்கூடிய மக்கள்தொகை உள்ள சிறிய நகரங்களில் திருச்சி, வேலூர், ஈரோடு, சேலம், திருப்பூர் ஆகிய ஐந்து நகரங்களும் முதல் தர வரிசையில் பாதுகாப்பான நகரங்களாக இருக்கிறது.

சென்னை மாணவி விவகாரத்தில் மட்டுமல்ல; எந்தப் பாலியல் வன்கொடுமை புகாரிலும் இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதும் இல்லை; விலகி நிற்பதும் இல்லை. மனசாட்சி இல்லாமல், பெண்களின் பாதுகாவலர்கள் மாதிரி பேசுபவர்கள் கடந்த அண்ணா தி.மு.க ஆட்சியில் பொள்ளாச்சியில் என்ன நடந்தது என்று கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும். பொள்ளாச்சியில் நடந்தது ஒரு பெண் சம்பந்தப்பட்ட பாலியல் குற்றம் இல்லை; தொடர்ச்சியாக பல பெண்களுக்குப் பாலியல் வன்கொடுமைகளை இரண்டு வருடங்களாக ஒரு கும்பல் செய்து வந்திருக்கிறது. அன்றைய அண்ணா தி.மு.க ஆட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சி.பி.ஐ.-வசம் இந்த வழக்கு சென்ற பிறகுதான் உண்மைகள் வெளிச்சத்துக்கே வந்தது.

பாதிக்கப்பட்ட பல பெண்களில் ஒருவர், தனக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி, தன்னுடைய அண்ணனிடம் சொல்கிறார். பிரச்சினைக்குரிய நான்கு பேரையும் அவரே பிடித்துக் கொண்டு வந்து பொள்ளாச்சி டவுன் காவல் நிலையத்தில் ஒப்படைக்கின்றார். பாலியல் தொல்லை, ஆபாசமாக படம் எடுத்தல், செயின் பறிப்பு என்று புகார் கடிதம் தரப்படுகிறது. வீடியோக்கள், செல்போன்கள் ஆகியவற்றுடன் 4 குற்றவாளிகளையும் இவர்கள் ஒப்படைக்கிறார்கள். இதனைப் பெற்றுக்கொண்ட போலீசார் வழக்கு பதியவில்லை; எல்லாரையும் விடுவித்துவிட்டார்கள். இதுதான் அன்றைய முதல்வர் "சார்" ஆட்சியில் சட்டம் - ஒழுங்கின் லட்சணம்!

அதுமட்டுமா? பாதிக்கப்பட்ட பெண் கொடுத்த புகாரை அப்படியே குற்றம் செய்தவர்களிடமே கொடுத்து விட்டார்கள். இதையடுத்து அண்ணா தி.மு.க பிரமுகர் பார் நாகராஜன் என்பவர் பாதிக்கப்பட்ட பெண்ணின் அண்ணனைத் தாக்குகிறார். அந்தப் புகார் மீதும் நடவடிக்கை எடுக்காத அரசுதான் அண்ணா தி.மு.க. அரசு.

பிரச்சினை பெரிதாகிறது என்று தெரிந்ததும், இதிலே சம்பந்தப்பட்ட முக்கிய நபரான திருநாவுக்கரசை கைது செய்யாமல், ஏதோ மூன்று பேரை கைது செய்து கணக்கை முடிக்கப் பார்த்தார்கள். ஆனால், சி.பி.ஐ. விசாரணையில், பொள்ளாச்சி சம்பவம் முழுவதுமே அண்ணா தி.மு.க. பிரமுகர்களால்தான் நடத்தப்பட்டது என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள்.

இவர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான், இப்படி ஒரு சம்பவமே நடக்காதது போன்று அன்றைய அண்ணா தி.மு.க. அரசு ஒரு பெரிய நாடகம் ஆடியது. (அப்போது அண்ணா தி.மு.க.வினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து கூச்சல் எழுப்பினார்கள்) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசியதை நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம் அல்லவா? அதைப்போல் நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். (மீண்டும் அ.தி.மு.க.வினர் கூச்சல்) இதனால்தான் “பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி” என்று நான் அப்பொழுதே சொன்னேன்.

இப்படி, பெண்களுக்கு எதிரான ஆட்சி நடத்திய 'சார்'ங்க எல்லாம் இப்பொழுது பேட்ஜ் அணிந்துகொண்டு உட்கார்ந்திருந்து, இப்பொழுது பாதியிலேயே எழுந்து போய்விட்டார்கள். இதுபோன்று 100 சார் கேள்விகளை அண்ணா தி.மு.க.-வைப் பார்த்து என்னால் கேட்க முடியும். ஒரு முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர், தன் பொறுப்பையும் தகுதியையும் மறந்து, பேட்ஜ் அணிந்து வந்தது, அரசியலில் எந்தளவுக்கு தாழ்ந்து போகவும் தயாராக இருக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டு.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்திட அண்ணா தி.மு.க. ஆட்சியில் 12 நாட்கள் ஆனது. ஆனால், சென்னை மாணவி வழக்கிலே புகார் கொடுத்த உடனே முதல் தகவல் அறிக்கை போடப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து சில மணி நேரத்திலேயே குற்றவாளி கைது செய்யப்பட்டிருக்கிறார். ஏனோ, இவற்றையெல்லாம் அரசியல் லாபத்திற்காக, அந்த நோக்கத்திற்காக மறைக்கிறார்கள்.

அதேபோன்று, இந்த வழக்கு பற்றி பா.ஜ.க.-வினர் பொதுவெளியில் பேசியிருக்கிறார்கள்; தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க. கதைகளை எல்லாம் சொல்லி, இந்த அவையின் மாண்பைக் குறைக்க நான் விரும்பவில்லை. அரசு மீது குற்றச்சாட்டுகளை வைக்கும்போது, பொறுப்பினை உணர்ந்து பேச வேண்டும்.

உயர்நீதிமன்றம் அமைத்திருக்கிற சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை முழு வீச்சில் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. வேறு யாரேனும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்தால், அது யாராக இருந்தாலும், எந்தப் பின்னணியைச் சேர்ந்தவராக இருந்தாலும், கடும் நடவடிக்கையை நிச்சயமாக, உறுதியாக நாங்கள் எடுப்போம் என்பதை மீண்டும் ஒருமுறை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சி, மகளிருக்கான ஆட்சி! கட்டணமில்லா விடியல் பேருந்து பயணத்தைத் தொடங்கி, கோடிக்கணக்கான மகளிருக்கு உரிமைத் தொகையை உறுதி செய்து, கல்லூரிக்கு வரும் அரசுப் பள்ளி மாணவியரை புதுமைப் பெண்களாக வளர்த்தெடுத்து வருகின்ற ஆட்சி. மகளிருக்காகவே நாள்தோறும் திட்டங்களைத் தீட்டி, அவர்களுடைய பேராதரவோடு செயல்பட்டு வருகிற இந்த அரசு மீது, அடிப்படையில்லாத குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அதன்மூலமாக களங்கம் ஏற்படுத்தலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது ஒருபோதும் எடுபடாது.

இறுதியாக, நான் உங்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்வது, தி.மு.க. அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதாக நினைத்துக்கொண்டு, உயர்கல்வி கற்க வருகிற மாணவிகளை அச்சுறுத்தி, அவர்களுடைய கல்வியைக் கெடுத்துவிடாதீர்கள் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## டாடா மோட்டார்ஸின் மின்சார பேருந்துகள் 25 கோடி கிலோமீட்டர்கள் பயணித்துள்ளன; இது பூமியின் சுற்றளவை 6200 முறை கடந்து சென்றதற்கு சமமாகும்!



சென்னை, 08 ஜனவரி 2025: இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகன உற்பத்தியாளரான டாடா மோட்டார்ஸ், 10 நகரங்களில் பாதுகாப்பான, வசதியான மற்றும் சொகுசான பொதுப் போக்குவரத்தை வழங்கும் 3,100 மின்சாரப் பேருந்துகள் மூலம், ஒட்டுமொத்தமாக 25 கோடி கிலோமீட்டர்கள் பயணித்துள்ளதை அறிவித்துள்ளது. இது, பூமியின் சுற்றளவை 6,200 முறைகள் சுற்றிவருவதை விட அதிகமாகும்!

சராசரியாக 200 கிமீ/நாள் பயணிக்கும் மின்சாரப் பேருந்துகள் காற்று மாசுபாட்டைக் குறைப்பதிலும், ஒவ்வொரு நகரத்திலும் பசுமையான மக்கள் நடமாட்டத்தை வழங்குவதிலும் மகத்தான பங்களிப்பைச் செய்துள்ளன. ஒட்டுமொத்தமாக, டாடா மோட்டார்ஸின் மின்சார பேருந்துகள் 25 கோடி கிமீ தூரத்தை கடந்துள்ளதன் மூலம், சுமார் 1.4 லட்சம் டன்கள் சிஓ2 டையில்பைப் உமிழ்வைச் சேமிக்க உதவியுள்ளன.

இந்த சாதனையை அறிவித்துப் பேசிய, டிஎம் எல் ஸ்மார்ட் சிட்டி மொபிலிட்டி சொல்யூஷன்ஸ் லிமிடெட்டின் சீ ஈ ஓ மற்றும் எம் டி திரு. அசிம் குமார் முகோபாத்யாய் அவர்கள், "25 கோடி கிலோமீட்டர் தூரத்தை புகை மாசு இல்லாத மின்சார பேருந்துகளின் நவீன ரக வாகனங்கள் மூலம் கடந்து சாதனை படைத்துள்ளதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த 12 மாதங்களில் 15 கோடி கிமீ தூரம் பயணித்துள்ளது, நிலையான நகர்ப்புற நகர்வு தீர்வுகளுக்கான வளர்ந்து வரும் விருப்பத்தை உறுதிப்படுத்துகிறது, இது பயணிகள் மற்றும் மாநில போக்குவரத்து நிறுவனங்களால் சாத்தியமாகியுள்ளது. அவர்களின் நம்பிக்கை மற்றும் ஆதரவிற்காக நாங்கள் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம், மேலும் வெகுஜன நடமாட்டத்தை பாதுகாப்பான, புத்திசாலித்தனமான மற்றும் பசுமையானதாக மாற்றுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை அவர்களுக்கு உறுதியளிக்கிறோம்" என்று கூறினார்.

டாடா மோட்டார்ஸின் மின்சார பேருந்துகள் பாரம்பரிய போக்குவரத்திற்கு நிலையான, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் திறமையான மாற்றீட்டை வழங்குகின்றன. டேட்டா-உந்துதல் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்புடன், இந்த கடற்படையானது 95%க்கும் அதிகமான நேரத்தைக் கொண்டுள்ளது, இது டாடா மோட்டார்ஸின் இ-பஸ் மொபிலிட்டி தீர்வின் நம்பகத்தன்மை மற்றும் மும்பை, புது தில்லி, பெங்களூரு, அகமதாபாத், கொல்கத்தா, ஜம்மு, ஸ்ரீநகர், லக்னோ, குவஹாத்தி மற்றும் இந்தூர் போன்ற நகரங்களில் ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கான பயணிகளுக்கு சீரான, பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்திற்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது

ஒவ்வொரு டாடா மோட்டார்ஸ் எலெக்ட்ரிக் பேருந்தும் வசதியான சவாரிக்கு மென்மையான ஏர் சஸ்பென்ஷன், மாற்றுத்திறனாளி பயணிகளுக்கு எளிதாக அணுகக்கூடிய ஹைட்ராலிக் லிஃப்ட் மற்றும் பணிச்சூழலியல் இருக்கை போன்ற மேம்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது. 9 மற்றும் 12 மீட்டர் கட்டமைப்புகளில் கிடைக்கும், இந்த மின்சார பேருந்துகள் அதிநவீன தொழில்நுட்பத்துடன் வலுவான செயல்திறனுடன் தடையின்றி இணைக்கப்பட்டுள்ளன.

## திரையுலகில் 25வது ஆண்டில் நடிகர் உதயா: அஜ்மல், யோகி பாபு உடன் இணைந்து நடிக்கும் 3 நாயகர்களின் பிரம்மாண்ட கேங்க்ஸ்டர் திரைப்படம் 'அக்யூஸ்ட்'



சென்னை, 08 ஜனவரி 2025: 'திருநெல்வேலி' திரைப்படம் மூலம் 2000ம் ஆண்டில் திரையுலகில் அடியெடுத்து வைத்த நடிகர் உதயா, கலைப்பயணத்தில் தனது வெள்ளி விழா வருடத்தை குறிக்கும் விதமாக 'அக்யூஸ்ட்' என்ற பிரம்மாண்ட திரைப்படத்தில் அஜ்மல் மற்றும் யோகி பாபுவுடன் இணைந்து நடிக்கிறார்.

ஜேஷன் ஸ்டுடியோஸ், ஸ்ரீ தயாகாரன் சினி புரொடக்ஷன் மற்றும் எம் ஐ ஒய் ஸ்டுடியோஸ் பேனர்களில் ஏ.எல். உதயா, தயா என். பன்னீர்செல்வம், எம். தங்கவேல் ஆகியோர் தயாரிக்கும் இப்படத்தை கன்னட திரையுலகில் வெற்றி படங்களை இயக்கிய பிரபு ஸ்ரீநிவாஸ் இயக்குகிறார். பிரபல கன்னட நடிகை ஜான்விகா நாயகியாக நடிக்கிறார்.

குற்றம் சாட்டப்பட்ட அனைவருமே குற்றவாளிகள் அல்ல, சிஸ்டத்தில் ஏற்படும் பிழைகளால் நல்லவர்கள் கூட எப்படி பாதிப்படைகிறார்கள், தாதாவக உருவாகிறார்கள் என்பதை விறுவிறுப்பாக சொல்லும் 'அக்யூஸ்ட்' திரைப்படத்தில் இதுவரை ஏற்றிராத முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் உதயா நடிக்கிறார். அவருடன் முதல் முறையாக அஜ்மல் மற்றும் யோகி பாபு இணைந்துள்ளனர்.

மருதநாயகம் ஐ ஒளிப்பதிவு செய்ய நரேன் பாலகுமார் இசை அமைக்கிறார். முன்னணி எடிட்டரான கே.எல். பிரவீன் படத்தொகுப்பை கையாளுகிறார். பிரபல சண்டைப் பயிற்சி இயக்குநர் ஸ்டண்ட் சில்வா ஆக்ஷன் காட்சிகளுக்கு பொறுப்பேற்றுள்ளார். கலை இயக்கம்: ஆனந்த் மணி, மக்கள் தொடர்பு: நிகில் முருகன்.

ஜேஷன் ஸ்டுடியோஸ், ஸ்ரீ தயாகாரன் சினி புரொடக்ஷன் மற்றும் எம் ஐ ஒய் ஸ்டுடியோஸ் பேனர்களில் ஏ.எல். உதயா, தயா என். பன்னீர்செல்வம், எம். தங்கவேல் ஆகியோர் தயாரிக்கும், பிரபு ஸ்ரீநிவாஸ் இயக்கத்தில் உதயா, அஜ்மல் மற்றும் யோகி பாபு உள்ளிட்டோர் நடிக்கும் 'அக்யூஸ்ட்' திரைப்படத்தின் பூஜை சென்னையில் ஜனவரி 2 அன்று நடைபெற்றது. இதில் தயாரிப்பு சங்கம் உள்ளிட்ட தமிழ் திரையுலகின் முக்கிய சங்கங்களின் நிர்வாகிகள் உள்ளிட்ட திரைப் பிரபலங்கள் பங்கேற்று வாழ்த்தினர். 'அக்யூஸ்ட்' திரைப்படத்தின் படப்பிடிப்பை விரைவில் நிறைவு செய்து 2025 கோடை காலத்தில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

## டிரண்ட்ஸ் சினிமாஸ் ஜெ எம் பஷீர் தயாரிப்பில் ஆர் அரவிந்தராஜ் இயக்கத்தில் ஆயிஷா நடிக்கும் 'வீரமங்கை வேலுநாச்சியார்' டீசர் வேலுநாச்சியார் பிறந்தநாள் அன்று வெளியீடு



சென்னை, 08 ஜனவரி 2025: லண்டனில் படப்பிடிப்பு நடத்தப்பட்டு அடுத்த வருடம் வேலுநாச்சியார் பிறந்த நாளுக்கு வாழ்க்கை வரலாற்று திரைப்படம் வெளியாகிறது

இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்ட வீராங்கனையும் வெள்ளையர்களை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்ட ஒரே அரசியுமான வேலு நாச்சியாரின் வீர வரலாற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் விதமாக 'வீரமங்கை வேலுநாச்சியார்' திரைப்படம் வேகமாக வளர்ந்து வருகிறது.

டிரண்ட்ஸ் சினிமாஸ் பேனரில் ஜெ எம் பஷீர் தயாரிக்கும் இத்திரைப்படத்தை ஆர் அரவிந்தராஜ் இயக்க, வேலுநாச்சியாராக முதன்மை வேடத்தில் நடித்து திரையுலகில் அறிமுகம் ஆகிறார் ஆயிஷா.

'வீரமங்கை வேலுநாச்சியார்' திரைப்படத்தில் முக்கிய பாத்திரமான பெரிய மருதாக இப்படத்தின் தயாரிப்பாளரும், 'தேசிய தலைவர்' திரைப்படத்தில் பசும்பொன் முத்துராமலிங்க தேவராக நடித்திருப்பவருமான ஜெ எம் பஷீர் நடிக்கிறார். இவரது மகள் தான் ஆயிஷா என்பது குறிப்பிடத்தக்கது.

'வீரமங்கை வேலுநாச்சியார்' திரைப்படத்தின் மோஷன் பிக்சர் டீசர் வேலுநாச்சியாரின் பிறந்த நாளான ஜனவரி 3 அன்று வெளியிடப்பட்டது. இந்த வாழ்க்கை வரலாற்று திரைப்படத்தின் படப்பிடிப்பு லண்டனில் அடுத்த மாதம் நடைபெற உள்ளது. தொடர்ந்து படப்பிடிப்பு மற்றும் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று அடுத்த வருடம் வேலு நாச்சியாரின் பிறந்தநாளுக்கு திரைப்படத்தை வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

மோஷன் பிக்சர் டீசர் வெளியீடு குறித்து பேசிய தயாரிப்பாளரும் நடிகருமான ஜெ எம் பஷீர், "வேலு நாச்சியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை திரையில் கொண்டு வருவதில் மிகவும் பெருமை அடைகிறோம். இதில் முதன்மை வேடத்தில் எனது மகள் ஆயிஷா நடிப்பது பெரும் மகிழ்ச்சி. வேலுநாச்சியாரின் பிறந்தநாள் அன்று இந்த டீசரை வெளியிட்டு இருப்பது இரட்டிப்பு சந்தோஷம்," என்றார்.

நமது நாட்டுக்காகவும், தேச விடுதலைக்காகவும் தன்னலம் இன்றி போராடிய மாபெரும் ஆளுமைகள் குறித்து இன்றைய இளைய சமுதாயம் அறிவது அவசியம் என்றும் இதன் காரணமாகவே 'தேசிய தலைவர்' மற்றும் 'வீரமங்கை வேலுநாச்சியார்' உள்ளிட்ட திரைப்படங்களை தான் தயாரித்து வருவதாகவும் பஷீர் மேலும் தெரிவித்தார்.

வரலாற்று ஆவணங்களை ஆய்வு செய்து இப்படத்தின் ஸ்கிரிப்ட் உருவாக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். 'வீரமங்கை வேலுநாச்சியார்' திரைப்படத்திற்கு ஜெ ஸ்ரீதர் ஒளிப்பதிவு செய்ய, சண்டைக் காட்சிகளை மிராக்கிள் மைக்கேல் வடிவமைக்கிறார்.

## முழுக்க முழுக்க மலேசியாவில் படமாக்கப்பட்ட எமோஷன்ஸ் நிறைந்த வித்தியாசமான காதல் கதையாக உருவாகி இருக்கிறது " கண்நீரா "



சென்னை, 08 ஜனவரி 2025: இந்த படத்தில் நடித்துள்ள நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவரும் மலேசியா வாழ் தமிழர்கள் என்பதை குறிப்பிடத்தக்கது. கண்நீரா என்பதற்கு கண்ணுக்குள் இருக்கிற நீர் போல என்று பொருள் காதல் என்றாலே கண்ணீருக்கு பஞ்சமிருக்காது, அதோடு படத்தில் நாயகியின் கதாபாத்திரத்தின் பெயர் நீரா எனவே இரண்டையும் இணைத்து " கண்நீரா " என்று வித்தியாசமாக பெயரிட்டுள்ளனர்.

இந்த படத்தை மலேசியா வாழ் தமிழர் கதிரவென் இயக்கி நாயகனாக நடித்துள்ளார்.

நயாகியாக சாந்தினி கவுர், மாயா கிளம்மி, நந்தகுமார் என் கே ஆர் ஆகியோர் நடித்துள்ளனர்.

படத்தின் கதை எழுதி இணை இயக்குனராக பணியாற்றியுள்ளார் கௌசல்யா நவரத்தினம்.

ஒளிப்பதிவு - ஏகணேஷ் நாயர் இசை - ஹரிமாறன் பாடல்கள் - கௌசல்யா.என் கலை - குதூஸ் சங்கிலிஷா நடனம் - மாஸ்டர் சேவியர், மாஸ்டர் முகிலன்.

மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ்

தயாரிப்பு - உத்ரா புரொடக்சன்ஸ் எஸ்.ஹரி உத்ரா - மோர் 4 ப்ரொடக்ஷன்ஸ் திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி நாயகனாக நடித்துள்ளார் - கதிரவென்.

படம் பற்றி இயக்குனர் கதிரவென் பேசியதாவது...

லவ் படம் என்றாலே பேண்டஸி இருக்கும் ஆனால் இது முற்றிலும் மாறுபட்ட மிகவும் யதார்த்தமான காதல் கதை.

நூத்துக்கு தொண்ணூறு சதவீதம் பேர் காதல் ரிலேஷன்ஷிப் -ல கண்டிப்பா இருப்பாங்க, இல்ல கடந்து வந்திருப்பாங்க. காதலர்களுக்கு என்னமாதிரியான அணுகுமுறை தேவைப்படுகிறது என்பதை ஆர்ட் ஃபிலிமா இல்லாம கமர்சியல் கலந்து ஜனரஞ்சகமான படமாக உருவாக்கி இருக்கிறோம்.

படம் பார்ப்பவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் என் வாழ்வில் நடந்தது என் ஃபேமிலியில் நடந்தது என்று ரசிகர்களை குளோஸா அவங்க ஹார்ட்டை டச் பண்ற மாதிரியான மிக்ஸ்சான எமோசன்ஸ் இதில் இருக்கு.

படம் பார்ப்பவர்கள் தங்களை நிச்சயம் நெருக்கமாக தொடர்பு படுதிப்பாங்க.

படப்பிடிப்பு முழுவதும் மலேசியா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றது என்றார் இயக்குனர் கதிரவென்.

படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# இந்திய திரைப்பட விழா 2025 மூலம் கொண்டாடப்பட்ட இந்தியா-இலங்கை கலாச்சார பிணைப்பு



சென்னை, 08 ஜனவரி 2025: கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், இலங்கையில் உள்ள அதன் பிராந்திய அலுவலகங்களுடன் இணைந்து, கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாச்சார மையத்துடன் இணைந்து ஐந்து நாள் இந்திய திரைப்பட விழாவை ஆரம்பித்தது. எக்ஸ் (முன்னர் ட்விட்டர்) இல் இந்த நிகழ்வை அறிவித்த உயர்ஸ்தானிகராலயம், இதை "சினிமா புத்திசாலித்தனம் மற்றும் கலாச்சார உறவுகளின் கொண்டாட்டம்" என்று விவரித்தது, மேலும் இந்த விழா சின்னமான கிரிக்கெட் திரைப்படமான '83' திரையிடலுடன் தொடங்கியது என்றும் கூறினார்.

1983 கிரிக்கெட் உலகக் கோப்பையை இந்தியா வென்றதை நினைவு கூரும் வகையில் '83' திரைப்படம் ஜனவரி 6 ஆம் தேதி மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கப்பட்டது. உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கையின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ சுனில் குமார கமகே மற்றும் கிரிக்கெட் ஜாம்பவான்களான அர்ஜுன ரணதுங்க மற்றும் அரவிந்த டி சில்வா ஆகியோர் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

ஜனவரி 10 வரை இயங்கும் இந்த விழாவில், ஆர்.ஆர்.ஆர், விக்ரம், டோலு, ரேவா மற்றும் மெயின் அடல் ஹூன் போன்ற பிளாக்பஸ்டர்கள் உட்பட இந்திய திரைப்படங்களின் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு இடம்பெற்றுள்ளது.

இந்தியாவும் இலங்கையும் நீண்டகால கலாச்சார பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன, இந்த விழா இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த உறவுகளுக்கு ஒரு சான்றாகும். இந்திய சினிமாவின் மாயாஜாலத்தின் மூலம் இலங்கையில் உள்ள இந்திய புலம்பெயர்ந்தோருக்கு வீட்டின் சுவையை வழங்கும் அதே வேளையில் இந்த இணைப்புகளை ஆழப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சினிமா பெரிய ஆபத்தில் இருக்கிறது , "கண்ணீரா" இசை வெளியீட்டு விழாவில் பேரரசு !!




சென்னை, 08 ஜனவரி 2025: உத்ரா ப்ரொடக்ஷன்ஸ் மற்றும் மோர் 4 ப்ரொடக்□ஷன்ஸ் தயாரிப்பில், இயக்குநர் கதிரவென் எழுதி இயக்கி, நாயகனாக நடித்துள்ள படம் "கண்நீரா". மாறுப்பட்ட களத்தில் வித்தியாசமான காதல் கதையாக உருவாகியுள்ள இப்படம் விரைவில் திரைக்கு வரவுள்ள நிலையில், இப்படத்தின் இசை வெளியீட்டு விழா, படக்குழுவினருடன் திரைப்பிரபலங்கள் கலந்துகொள்ள, பத்திரிக்கை ஊடக நண்பர்கள் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வினில்....

கதையாசிரியர் கௌசல்யா நவரத்தினம் பேசியதாவது...

இந்த தருணம் மிக மகிழ்ச்சியாக உள்ளது. எங்களை மாதிரி வெளிநாட்டு வாழ் தமிழர்களுக்கு இத்தனை ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி. உத்ரா ப்ரொடக்ஷன்ஸ் மற்றும் கதிரவென் ஆகியோருக்கு நன்றி. என்னை நம்பி நான் எழுதிய கதையை, இத்தனை பெரிய படைப்பாக, இங்கு கொண்டு வந்து சேர்த்ததற்கு நன்றி. இந்தப்படம் வெற்றியடைய வேண்டுமெனக் கடவுளை வேண்டிக்கொள்கிறேன்.

நடிகர் ரோபோ சங்கர் பேசியதாவது...

கண்நீரா படக்குழுவிற்கு என் வாழ்த்துக்கள். கதாசிரியர் பேசும்போது, இயக்குநருக்குத் தனியாக நன்றி சொன்னார். இயக்குநர் அவருடைய கணவர் தான், ஆனால் யாரோ போல அவர் பேசி நன்றி சொன்னது ஆச்சரியம் தான். இருவரும் இணைந்து இந்தப் படத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இடையில் குழந்தையையும் உருவாக்கி இருக்கிறார்கள், இந்த படத்தை முடித்துவிட்டு, அவர்கள் அடுத்த குழந்தைக்கான வேலையைப் பார்க்கட்டும். வாழ்த்துக்கள். முதல் படத்திலேயே இசை வெளியீட்டு விழா நடத்தும்போது, இரண்டாவது பாகத்தையும் முடித்து, மிகத் தயாராக வைத்துள்ளார்கள். அவர்களின் வேகத்திற்கு மூன்றாம் பாகமே எடுக்கலாம். மலேசியாவில் படத்தை எடுத்து, தென்னிந்தியாவில் ரிலீஸ் செய்கிறார்கள் இங்குள்ள அனைத்து சங்கங்களும் உங்களை வரவேற்று ஆதரவு தருவார்கள், வாழ்த்துக்கள். இப்படம் பெரிய வெற்றி பெற வாழ்த்துக்கள்.

இயக்குநர் பேரரசு பேசியதாவது...

கண்நீரா தலைப்பே மிக அருமையாக உள்ளது. படம் சிறப்பாக வந்திருக்கிறது இதில் சிறப்பு என்னவென்றால் மனைவி கதை எழுதியுள்ளார், கணவர் இயக்குநராகப் படம் எடுத்திருக்கிறார். சாதாரணமாக குடும்பங்களில் திரைப்படத்திற்கு எதிராகத் தான் பேசுவார்கள், ஆனால் இப்படத்தில் அவரது மனைவி அவருக்கு உறுதுணையாக நின்று, படத்தை உருவாக்கியுள்ளார். இருவருக்கும் என் மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரொமான்ஸ் படங்கள் வருவது இப்போது குறைந்து விட்டது. அந்த வகையில் இந்த திரைப்படத்தினை காதலை மையமாக வைத்து மிகச் சிறப்பாக எடுத்துள்ளனர். நீண்ட நாள் கழித்து நல்ல காதல் படம் வருகிறது. மலேசியாவில் எடுத்து, இங்கு வெளியிடுகிறார்கள். அனைவரும் ஆதரவு தர வேண்டும். சின்ன படங்கள் ஓடவில்லை என சொல்கிறார்கள், சின்னப்படங்கள் பார்க்கத் திரையரங்கிற்குக் கூட்டமே வருவதில்லை என திரையரங்கில் சொல்கிறார்கள். இதைக் கண்டிப்பாகப் பேசித் தான் தீர்க்க வேண்டும். சினிமா பெரிய ஆபத்தில் இருக்கிறது. இன்று சின்னப்பட்டங்கள் பார்க்க ஆட்கள் இல்லை, தியேட்டரும் இல்லை, படம் நேரத்திற்கு ஒர்த்தாக இருந்தால் மட்டுமே மக்கள் வருகிறார்கள். பெரிய ஹீரோ படங்களுக்கு இந்த பிரச்சனையில்லை. சின்னப்படங்களுக்கு மக்களை வரவைக்க, என்ன செய்ய வேண்டும். இதை அனைவரும் அமர்ந்து பேச வேண்டும். திரையரங்கில் மக்கள் வாங்கும் பொருட்கள் கொள்ளை விலையில் இருக்கிறது. கார் பார்க்கிங் கொள்ளை இப்படி இருந்தால், மக்கள் எப்படி வருவார்கள். நம் மீது குறை வைத்துக்கொண்டு மக்களைக் குறை சொல்லக்கூடாது. இவர்கள் பல கஷ்டப்பட்டு இப்படத்தைத் திரைக்குக் கொண்டு வருகிறார்கள். இந்தப்படம் பெரிய வெற்றி பெற வாழ்த்துக்கள்.

# ரூபே ஆன்-தி-கோ வழியாக சென்னை முழுவதும் தடையற்ற போக்குவரத்தை வழங்குவதற்கு என்பிசிஐ மற்றும் எம்டிசி ஆகிய நிறுவனங்கள் இணைகின்றன

சென்னை, 08 ஜனவரி 2025: இந்தியாவின் டிஜிட்டல் செலுத்துதல் புரட்சியை மேம்படுத்துகின்ற மற்றும் புதுமைகளை முன்னெடுத்துச் செல்கின்ற நிறுவனமான நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (என்பிசிஐ), போக்குவரத்திற்கான ஒரு காண்டாக்ட்லெஸ் செலுத்துதல் தீர்வான ரூபே ஆன்-தி-கோ ஐ ஒருங்கிணைப்பதற்கு சென்னையின் பொதுப் பேருந்து சேவையான பெருநகரப் போக்குவரத்துக் கழகத்துடன் (எம்டிசி) இணைந்துள்ளது. இந்த ஒருங்கிணைப்பு, சென்னையில் உள்ள பயணிகள், ஒரே அட்டை மூலம் சென்னை மெட்ரோ மற்றும் எம்டிசி பேருந்துகள் இடையே தடையின்றி பயணிக்க மற்றும் சென்னை மெட்ரோ பார்க்கிங் வசதிகளை பயன்படுத்த அனுமதிக்கிறது. இந்த முன்முயற்சியானது, நீண்ட வரிசைகள், சரியான சில்லறைக்கான தேவை மற்றும் சிக்கலான டிக்கெட் செயல்முறைகள் போன்ற பொதுவான பயணிகளின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது.

நேஷனல் காமன் மொபிலிட்டி கார்டு (என்சிஎம்சி) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட ரூபே ஆன்-தி-கோ திட்டம் இந்தியாவின் பல நகரங்களில் பொது போக்குவரத்தை எளிதாக்குகிறது. தனிச்சிறப்பான ரூபே காண்டாக்ட்லெஸ் சின்னத்தால் குறிக்கப்பட்ட ஒற்றை அட்டை மூலம் மெட்ரோ மற்றும் பேருந்துகளில் பயணிகளுக்கு ஒரு தடையற்ற, தொந்தரவு இல்லாத மற்றும் தொடர்பற்ற அனுபவத்தை இது வழங்குகிறது. இந்த கார்டின் சேமிக்கப்பட்ட மதிப்பு டிக்கெட்டிங், பணத்தை ஏற்றவும், பல்வேறு போக்குவரத்து முறைகளில் அவற்றைப் பயன்படுத்தவும் பயனர்களை அனுமதிக்கிறது. கூடுதலாக, இந்த கார்டு மெட்ரோ சுரங்கங்கள் மற்றும் நகரும் பேருந்துகளில், இணைய இணைப்பு இல்லாவிட்டாலும் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இதை அமைக்கின்ற வகையில் ஆஃப்லைன் பரிவர்த்தனைகளை ஆதரிக்கிறது

இந்த பரவலான ரூபே ஆன்-தி-கோ செயல்படுத்தல், ஒரு பன்-மாதிரி போக்குவரத்து அமைப்பு மூலம் சென்னையை ஒரு முன்னணி நகரமாக நிலைநிறுத்துகிறது. இது வசதி மற்றும் செயல்திறனை மேம்படுத்துகின்ற வகையில் பயணிகள் தங்கள் தற்போதைய ரூபே காண்டாக்ட்லெஸ் டெபிட், கிரெடிட் அல்லது ப்ரீபெய்ட் கார்டுகளைப் பயன்படுத்த அவர்களை அனுமதிக்கிறது. 3.2 மில்லியனுக்கும் அதிகமான சென்னை எம்டிசி1 தினசரி பயணிகள் இந்த பயனுள்ள போக்குவரத்து முறையால் பயனடைவார்கள். இந்த எம்டிசி சிங்கார சென்னை ஒன் சிட்டி ஒன் கார்டை சென்னை மெட்ரோ ரெயிலில் (சிஎம்ஆர்எல்) பயன்படுத்தலாம், அதே போல சிஎம்ஆர்எல் சிங்கார சென்னை ஒன் சிட்டி ஒன் கார்டை எம்டிசி பஸ் நெட்வொர்க்கில் பயன்படுத்தலாம்.

"எம்டிசி பஸ் நெட்வொர்க் முழுவதும் ரூபே ஆன்-தி-கோ கார்டின் இந்த ஒருங்கிணைப்பு மூலம், சென்னை ஒரு அறிவார்ந்த, மிகவும் பயனுள்ள நகர்ப்புற போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை நோக்கி ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுக்கின்றது. இந்த ஒருங்கிணைந்த செலுத்துதல் தீர்வு, தினசரி பயணத்தை வேகமாகவும், மிகவும் வசதியாகவும், முற்றிலும் பணமில்லாமலும் ஆக்குகின்ற வகையில், பேருந்துகள், பெருநகரங்கள் மற்றும் வாகன நிறுத்த வசதிகள் போன்ற பல முறைகளில் ஒரு ஒற்றை, தொடர்பற்ற கார்டைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. " என்று என்பிசிஐ, ப்ராடக்ட்ஸ் தலைவர் குணால் கலாவதியா கூறினார்.

" இந்தக் கூட்டாண்மை சென்னையின் பொதுப் போக்குவரத்து அமைப்பிற்கு ஒரு புரட்சிகர திருப்புமுனையைக் குறிக்கிறது. எம்டிசி பேருந்துகள் மற்றும் சென்னை மெட்ரோ முழுவதும் ரூபே ஆன்-தி-கோ கார்டை ஒருங்கிணைப்பதன் மூலம், நாங்கள் எங்கள் பயணிகளுக்கு ஒரு தடையற்ற பன் மாதிரி பயண அனுபவத்தை வழங்குகிறோம். சென்னையில் வசிப்பவர்களின் வாழ்வில் இது ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தை நாங்கள் எதிர்நோக்குகிறோம்." என்று எம்டிசி சென்னை இன் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் தெரிவித்தார்.

சென்னையில் மட்டுமின்றி, மும்பை, டெல்லி, பெங்களூரு, சென்னை, அகமதாபாத் மற்றும் கான்பூர் போன்ற நகரங்களில் உள்ள பெருநகரங்கள் அடங்கிய ஒரு பெருகிவரும் போக்குவரத்து நெட்வொர்க்குகளின் பட்டியல் அதோடுகூட மும்பை (பி.ஈ.எஸ்.டி), குவஹாத்தி, ஹரியானா, ஜம்மு, ஸ்ரீநகர், ஹிமாச்சல் மற்றும் அவுரங்காபாத் போன்ற நகரங்களில் போன்ற நகரங்களில் உள்ள பேருந்து சேவைகள் உட்பட பயனர்கள் ரூபே ஆன்-தி-கோ கார்டைப் பெறலாம். தடையற்ற போக்குவரத்து பயணத்தைத் தொடங்குவதற்கு ரூபே என்சிஎம்சி கார்டைப் பெறுவது பற்றிய கூடுதல் தகவலுக்கு, பயனர்கள் பங்கேற்கும் வங்கிகள், மெட்ரோ நிலையங்கள் அல்லது நியமிக்கப்பட்ட அலுவலகங்களுக்குச் செல்லலாம்.

ரூபே அதன் அதிநவீன கார்டு செலுத்துதல் நெட்வொர்க் மூலம் இந்தியாவின் செலுத்துதல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் முன்னணியில் உள்ளது. கூடுதலாக ரூபே கார்டுகள் வணிக விற்பனை நிலையங்களில் சுமூகமான பரிவர்த்தனைகளை எளிதாக்குகிறது மற்றும் யூ பி ஐ இல் ரூபே கிரெடிட் கார்டுகள் மூலம் யூ பி ஐ-இயக்கப்பட்ட பயன்பாடுகளுடன் இந்த கார்டை இணைப்பதன் மூலம் யூ பி ஐ பணம் செலுத்துதல்களை மேற்கொள்ள பயனர்களுக்கு நெகிழ்வுத்தன்மையை அனுமதிக்கிறது.

# டிரைவர் தூங்கியதால் விபத்து: நெல்லையில் ஆம்னி பஸ் கவிழ்ந்து ஒருவர் பலி; 35 பேர் படுகாயம்



சென்னை, 08 ஜனவரி 2025: நெல்லையில் ஆம்னி பஸ் டிரைவர் தூங்கியதால் நிலை தடுமாறி தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் பலியானார். 35 பேர் படுகாயம் அடைந்தனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் இருந்து நேற்று இரவு புறப்பட்ட ஆம்னி பஸ் ஒன்று நாகர்கோவில் நோக்கி சென்று கொண்டிருந்தது. இதில் 37 பேர் பயணம் செய்தனர்.

இந்நிலையில், இந்த பஸ் இன்று காலை பாளையங்கோட்டை டக்கம்மாள்புரம் ஐ ஆர் டி பாலிடெக்னிக் அருகே சென்றபோது திடீரென நிலை தடுமாறி தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதைத் தொடர்ந்து பாளையங்கோட்டை தீயணைப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புப் படை வீரர்கள், படுகாயம் அடைந்த 35 பேரை மீட்டு சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த பஸ்சில் பயணம் செய்த நெல்லை மாவட்டம் கூட்டப்புளி லெவிஞ்சிபுரம் பெரிய தெருவைச் சேர்ந்த பிரிஸ்கோ என்பவர் பலியானார்.

இந்நிலையில், பஸ் டிரைவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இது தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதில் முதல் கட்டமாக பஸ் ஓட்டுனர் திடீரென தூங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

# பாரம்பரியத்தில் நவீன மேம்பாடாக முத்தூட் நிதி நிறுவனத்தின் ஆதரவுடன் சூரிய மின்சக்தியை நிறுவியது தட்ஷிணசித்ரா

சென்னை, 08 ஜனவரி 2025: மெட்ராஸ் கைவினை அறக்கட்டளை மற்றும் தட்ஷிணசித்ரா அருங்காட்சியகம் இன்று புதிதாக நிறுவப்பட்ட சூரிய மின் உற்பத்தி நிலையத்தை திறந்து வைப்பதாக அறிவித்துள்ளது. தென்னிந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதிலும் காட்சிப்படுத்துவதிலும் நிலையான எரிசக்தி நடைமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான ஒரு முக்கிய முயற்சி இதுவாகும்.

முத்தூட் ஃபைனான்ஸால் நிதியளிக்கப்பட்டு ஆதரிக்கப்படும் இந்த சூரிய மின்சக்தித் திட்டம் ஆனது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, எரிசக்தி திறன் மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. நவீன தொழில்நுட்பத்தை பாரம்பரியப் பாதுகாப்புடன் இணைக்கும் நோக்கத்துடன் முத்தூட் ஃபைனான்ஸ் இந்தத் திட்டத்திற்காக ரூ.25 லட்சத்தை ஒதுக்கியது. இந்த முயற்சி கலாச்சார நிறுவனங்களில் நட்புசார் நடைமுறைகளுக்கு ஒரு அளவுகோலை அமைக்கிறது. புதிதாக நிறுவப்பட்ட இந்த சூரிய மின்சக்தி அருங்காட்சியகத்தின் மின்சார மின் நுகர்வில் கிட்டத்தட்ட 50-60% பூர்த்தி செய்யும். இதனால், ஆண்டுதோறும் ரூ.7 லட்சம் வரை சேமிக்கப்படும்.

புகழ்பெற்ற நடிகையும் இயக்குநருமான திருமதி ரேவதி, வெள்ளிக்கிழமை, ஜனவரி 3, 2025 அன்று காலை 11:00 மணிக்கு தட்ஷிணசித்ரா அருங்காட்சியகத்தில் சூரிய மின் உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைத்தார். இவர், இந்திய சினிமா மற்றும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு சிறப்புமிக்க பங்காற்றியவர். தட்ஷிணசித்ரா அருங்காட்சியகத்தின் இயக்குனர் திரு. சரத் நம்பியார், வரவேற்பு உரை வழங்கி மற்றும் விருந்தினர்களைப் பாராட்டினார். முத்தூட் நிதி நிறுவனத்தின் சி.எஸ்.ஆர் தலைவர் திரு. ரோஹித் ராஜ் கே, இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, முத்தூட் நிதி நிறுவனத்தின் நிலைத்தன்மைக்கான உறுதிப்பாட்டை எடுத்துரைத்தார். மெட்ராஸ் கிராஃப்ட் ஃபவுண்டேஷன் மற்றும் தட்ஷிணசித்ரா அருங்காட்சியகத்தின் நிறுவனர் டாக்டர் டெபோரா தியாகராஜன் மற்றும் பெல்ஸ்டார் மைக்ரோ ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் கல்பனா சங்கர் ஆகியோர் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் நிலையான நடைமுறைகளின் பங்கை வலியுறுத்தி கூட்டத்தில் உரையாற்றினர். தட்ஷிணசித்ரா அருங்காட்சியகத்தின் கலாச்சார இயக்குநர் திருமதி அனிதா பொட்டம்குளம் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

நிகழ்ச்சியில் பேசிய தட்ஷிணசித்ரா அருங்காட்சியகத்தின் இயக்குநர் திரு. சரத் நம்பியார், "தென்னிந்தியாவின் பன்முகத்தன்மை கொண்ட பாரம்பரியத்தைப் பாதுகாப்பது என்பது கலை மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், அவை செழித்து வளரும் சுற்றுச்சூழலையும் சேர்ந்ததே ஆகும். இந்த சூரிய மின் நிலையம், நிலையான நடைமுறைகளுக்கான நமது உறுதிப்பாட்டைக் குறிக்கிறது, நமது கடந்த காலத்தின் பொக்கிஷங்கள் எதிர்கால சந்ததியினருக்கு பொறுப்புடன் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது. அருங்காட்சியகம் பசுமையான, நிலையான எதிர்காலத்தை நோக்கி ஒரு பாதையை உருவாக்கும் இந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லில் இணைந்து ஒரு பகுதியாக இருப்பதற்கு முத்தூட் ஃபைனான்ஸுக்கு தட்சிணசித்ரா தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது." என்றார்.

முத்தூட் ஃபைனான்ஸின் நிர்வாக இயக்குநர் திரு. ஜார்ஜ் அலெக்சாண்டர் முத்தூட் கூறுகையில், "முத்தூட் ஃபைனான்ஸ் ஆனது கலை மற்றும் கலாச்சாரத்தை ஆதரிப்பது என்பதானது நிலைத்தன்மையை மேம்படுத்துவதோடு இணைந்தே செல்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். சமூகத்தையும் சுற்றுச்சூழலையும் மேம்படுத்தும் முயற்சிகளை ஆதரிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். தட்ஷிணசித்ரா அருங்காட்சியகத்தின் பசுமை ஆற்றலை நோக்கிய பயணத்தின் ஆதரவாளராக இருப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறோம். நிலையான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் அதே வேளையில், பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டுக்கு இது பெரும் சான்றாகும்" என்றார்.

தட்ஷிணசித்ரா அருங்காட்சியகத்தின் சூரிய சக்தி முயற்சி ஆனது ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான அதன் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. மரபுசார் ஆற்றலைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதன் மூலம், அருங்காட்சியகம் அதன் கார்பன் தடயத்தைக் குறைப்பது மட்டுமல்லாமல், நாடு முழுவதும் உள்ள கலாச்சார நிறுவனங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் அமைகிறது.

சி எஸ் ஆர் முயற்சிகளில் முன்னணியில் இருப்பதால், முத்தூட் நிதி எப்போதும் கல்வி, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் சமூக மேம்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்யும் அதன் பாரம்பரியத்தைத் தொடர நிறுவனம் பாடுபடுகிறது, இது போன்ற முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# ஸ்டாலின் பேச்சுக்கு எதிர்ப்பு சட்டசபையில் அண்ணா தி.மு.க. கடும் அமளி, வெளிநடப்பு

சென்னை, 08 ஜனவரி 2025: தமிழக சட்டசபையில் 100 சார் கேள்விகளை என்னால் கேட்க முடியும் என்று முதல்வர் ஸ்டாலின் பேசிய பதிலுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். பின்னர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரம் தொடர்பாக சட்டசபையில் இன்று கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதன் மீது உறுப்பினர்கள் பேசினார்கள். உறுப்பினர்களின் கேள்விக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பதிலளித்தார்.

முதலமைச்சர் ஸ்டாலின் பேசுகையில், பொள்ளாச்சி வழக்கில் அண்ணா தி.மு.க. என்ன செய்தது? பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் அண்ணா தி.மு.க. பிரமுகர்களுக்கு தொடர்பிருப்பது தெரிய வந்தது. முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யவே 12 நாட்கள் ஆனது. பொள்ளாச்சி விவகாரத்தில் அண்ணா தி.மு.க.வை நோக்கி 100 சார் கேள்விகளை கேட்க முடியும் என்றார். அதாவது யார் அந்த சார்? என்ற பேட்ஜை அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் அணிந்து வந்திருப்பதைக் குறிப்பிட்டு முதல்வர் ஸ்டாலின் இவ்வாறு பேசினார்.

யார் அந்த சார் என்பதை முடிந்தால் மத்திய அரசு உதவியுடன் கண்டுபிடியுங்கள் என்றும் முதல்வர் கூறினார்.

பொள்ளாச்சி விவகாரம் குறித்து முதலமைச்சர் பேசியதற்கு அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர். இருக்கையில் இருந்து எழுந்து சபாநாயகரை நோக்கி, அது பற்றி எல்லாம் பேசக்கூடாது என்று கோஷமிட்டு அமளியில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

கவர்னர் உரையன்று நடந்த சம்பவம் தொடர்பாக அண்ணா தி.மு.க.வினர் மீது நடவடிக்கை வேண்டாம் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கவர்னர் உரையின்போது சட்டசபையில் பதாகைகளுடன் வந்த அண்ணா தி.மு.க.வினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று சபாநாயகர் அப்பாவுவிடம் முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

அதற்கு சபாநாயகர் அப்பாவு கூறுகையில், கவர்னர் உரையன்று நடந்தவற்றை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. கவர்னர் உரையன்று உரிமை மீறலில் ஈடுபட்டோர் மீது உரிய விசாரணை நடத்தப்படும். இப்பிரச்னையானது அவை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்பப்படும்" என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பேசிய முதல்வர் ஸ்டாலின், "இனிவரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாது என்ற உறுதியை அவர்கள் தருவார்கள் எனில் இத்தோடு இப்பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் " என்றார். இதைத் தொடர்ந்து, அண்ணா தி.மு.க.வினர் மீதான நடவடிக்கை திரும்பப் பெறப்பட்டதாக சபாநாயகர் அப்பாவு அறிவித்தார்.

# ஷாவ்மி இந்தியா ரெட்மி 14சி 5ஜி ஸ்மார்ட்ஃபோனை வெளியிட்டது. ரூ.1000 கோடி குறியிலக்கை அடைந்து ரெட்மி நோட் 14 5ஜி சீரீஸ் சாதனை படைத்ததை கொண்டாடுகிறது




சென்னை, 08 ஜனவரி 2025: நாட்டின் நம்பிக்கைக்குரிய தலைசிறந்த ஸ்மார்ட்போன் பிராண்டான எக்ஸ்ஏஐஓடி ஷாவ்மி இந்தியா, உலகம் முழுவதும் ரெட்மி 14சி 5ஜி அறிமுகப்படுத்தப்படுவதை இன்று அறிவித்தது. இந்திய நுகர்வோரின் அதிகரித்து வரும் தேவைகளுக்கு இணங்க, அதிநவீன அம்சங்கள், தடையற்ற செயல்திறன் மற்றும் மின்னல் வேக - 5ஜி தொடர்பிணைப்பை வழகும் வகையில் வடிவமைக்கப்பட்ட ரெட்மி 14சி 5ஜி ஸ்மார்ட்ஃபோன் , குறைந்த விலை சந்தைப் பிரிவை மறுவறையரைக்குள்ளாக்க தயார் நிலையில் உள்ளது. இந்திய வாடிக்கையாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை மற்றும் அன்பின் அடையாளமாக இரண்டுவாரங்களுக்குள் நம்பமுடியாத ரூ.1000 கோடி வருமானத்தை ஈட்டி மாபெரும் சாதனை புரிந்த ரெட்மி நோட் 14 5ஜி சீரீஸ் இன் வெற்றியால் ரெட்மி 14சி 5ஜி அறிமுகம் நிறைவு பெற்றுள்ளது .

ரெட்மி 14சி 5ஜி ஆனது புதுமையுடன் அழகையும் நேர்த்தியையும் தடையின்றி ஒன்றரக் கலக்கிறது. 600 நிட்ஸ் உட்சபட்ச ஒளிர் திறனுடனான இதன் 17.5செமீ (6.88-இன்ச்) எச் டி+ டாட் டிராப் டிஸ்ப்ளே அமைப்பானது ஸ்ட்ரீமிங் கேமிங் அல்லது பிரவுசிங் போன்ற எந்த ஒரு செயல்பாட்டின் போதும் துடிப்புடனான ஆழ்ந்த காட்சி அனுபவத்தை வழங்குகிறது. சிறு அதிவேக 4ஸீனீ கட்டமைப்பின் மீது அமைக்கப்பட்ட ஸ்னாப்டிராகன் 4 ஜென் 2 5ஜி பிராசசரால் இயக்கப்படும் இந்தக் கருவி , மேம்பட்ட செயல்திறன் மற்றும் இயக்க ஆற்றலை உறுதி செய்கிறது. 12ஜி பி ராம் (6ஜி பி + 6ஜி பி விரிவாக்கப்பட்டது) மற்றும் 128ஜி பி யூஎஃப்எஸ் 2.2 சேமிப்பகத்துடனான இந்தக் கருவி , பல்பணியாக்கம் கேமிங் மற்றும் ஆப் நேவிகேஷன் ஆகியவற்றை எளிதாகக் கையாளுகிறது. கூடுதலாக, இதன் மைக்ரோ எஸ்டி கார்டு ஸ்லாட் , சேமிப்பகத்தை 1டிபி வரை விரிவாக்க ஆதரவளித்து உங்கள் தேவைகளுக்கு உகந்த அளவு போதுமான சேமிப்பிடத்தை வழங்குகிறது.

ரெட்மி 14சி 5ஜி இல் பொருத்தப்பட்டுள்ள 50எம்பி ஏஐ இரட்டை-கேமரா அமைப்பு விரிவான விவரங்கள் அடங்கிய உயிர்த்துடிப்புடனான துல்லியமான புகைப்படங்களை எந்த ஒரு வெளிச்சத்திலும் காட்சிப்படுத்த பயனர்களுக்கு உதவும் அதே வேளையில் இதில் அடங்கியுள்ள 18வா ஃபாஸ்ட் சார்ஜிங்குடன்கூடிய ஆற்றல் மிக்க 5160எம்ஏஎச் பேட்டரி நாள் முழுவதும் எந்த ஒரு தடையுமற்ற இடைவிடாத பயன்பாட்டை உறுதி செய்கிறது. ஆண்ட்ராய்டு 14 இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்ட ஷாவ்மி ஹைப்பர்ஓஎஸ் இல் இயங்கும் இந்த கருவி நீண்ட கால உழைப்பை உறுதி செய்யும் வகையில் இரண்டு வருட ஆண்ட்ராய்டு புதுப்பிப்புகள் மற்றும் நான்கு வருட பாதுகாப்பு புதுப்பிப்புக்களுக்கான உத்திரவாதத்துடன் தெளிவான, உள்ளுணர்வுடன் கூடிய பயனர் இடைமுகத்தை வழங்குகிறது, இது நீண்ட கால நம்பகத்தன்மையை உறுதி செய்கிறது.

ரெட்மி 14சி 5ஜி , 2025 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி முதல் Mi.com, Amazon.in, Flipkart மற்றும் அங்கீகரிக்கப்பட்ட Xiaomi ரீடெய்ல் பார்ட்னர்கள் முழுவதும் கிடைக்கும் மற்றும் 4ஜி பி + 64ஜி பி மாறுபாட்டிற்கு ரூ. 9,999 ஆகவும்,4ஜி பி + 128 ஜி பி க்கு 10,999 : மற்றும் ரூ. 11,999 க்கு 6 ஜிபி + 128 ஜிபி மாறுபாடு

சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ரெட்மி நோட் 14 5ஜி சீரீஸ் , புத்தாக்கம், செயல்திறன் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றின் ஒரு உகந்த ஈடு இணையற்ற கலவையை வழங்கி இடை நிலை விலைப் பிரிவு சந்தையில் ஸ்மார்ட்போன் தர அளவீடுகளை தொடர்ந்து மறுவரையறைக்குள்ளாக்கி வருகிறது .இந்தப் பிரிவிலேயே செயல்திறன் மிக்க நீடித்த உழைப்பை வழங்கி வரும் ரெட்மீ நோட் 14 ப்ரோ 5ஜி சீரீஸ் , ஸ்மார்ட்போன்கள், கொரில்லா க்ளாஸ் விக்டஸ் 2, ஐபி69 ஆதரவு மற்றும் அதிநவீன சாலிட் எலக்ட்ரோலைட் பேட்டரி தொழில்நுட்பத்துடன் ஒரு பெஞ்ச் மார்க் அளவை நிர்ணயித்து ஈடு இணையில்லாத நீடித்த உழைப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்துவரும் அதே வேளையில் எந்த வெளிச்சத்திலும் உயிர்த்துடிப்புடன் கூடிய துல்லியமான காட்சியமைப்பை வழங்க வல்ல இந்தப் பிரிவிலேயே மிக பிரகாசமான 120எச்இசட் அமோல்ட் டிஸ்ப்ளே அமைப்பு , மற்றும் ஒவ்வொரு முறையும் பிரமிக்க வைக்கும், விரிவான கசிதமான காட்சிகளைப் படம் பிடிக்கும் பல்திறன் கொண்ட 50எம்பி சோனி எல்ஒய்டி-600 கேமரா அமைப்பு ஆகியவை அடங்கிய ரெட்மி நோட் 14 5ஜி மனதைக் கொள்ளை கொள்கிறது .

ஆகச் சிறந்த செயல்திறன் மற்றும் வடிவமைப்புடன் கூடிய புதுமையான தயாரிப்புக்களை அனைத்து நுகர்வோர்களுக்கும் வழங்குவதில் ஷாவ்மி இந்தியா கொண்டுள்ள எந்த ஒரு தடுமாற்றமில்லாத உறுதியான அர்ப்பணிப்பை ரெட்மி நோட் 14 5ஜி சீரிஸ் மற்றும் ரெட்மி 14சி 5ஜி ஒன்றிணைந்து காட்சிப்படுத்துகின்றன .

# ‘இஸ்ரோ’ புதிய தலைவராக தமிழகத்தை சேர்ந்த நாராயணன் நியமனம் முதலமைச்சர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, 08 ஜனவரி 2025: இஸ்ரோவின் புதிய தலைவராக தமிழகத்தை சேர்ந்த வி. நாராயணனை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அவருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இஸ்ரோவின் தலைவராக உள்ள சோம்நாத் பதவி காலம் நிறைவடைய உள்ளது. இதையடுத்து புதிய தலைவராகவும், விண்வெளித் துறை செயலராகவும் தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர்.வி.நாராயண நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வரும் 14ம் தேதி முறைப்படி பதவியேற்றுக் கொள்கிறார். இஸ்ரோவின் 11வது தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2 ஆண்டுகள் அல்லது மறு அறிவிப்பு வரும் வரை வி. நாராயணன் இஸ்ரோ தலைவராக செயல்படுவார் என மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு அறிவித்துள்ளது.

இஸ்ரோவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட வி. நாராயணனுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

இஸ்ரோ புதிய தலைவராகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த வி. நாராயணன் நியமிக்கப்பட்டிருக்கும் செய்தி மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு என் உளம் நிறைந்த வாழ்த்துகள்!

தமிழ்நாட்டின் குமரி மாவட்டத்தில் எளிய பின்னணியில் பிறந்து, அரசுப் பள்ளியில் படித்து, உதவியாளர் நிலையில் இஸ்ரோவில் பணிக்குச் சேர்ந்த நாராயணன் இன்று அதன் தலைமைப் பொறுப்புக்கு உயர்ந்திருக்கிறார் எனில், அதன் பின் எத்தகைய ஆர்வமும், கடின உழைப்பும் இருக்கும் என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

சந்திரயான் 2, சந்திரயான் 3, ஆதித்யா எல் 1, ககன்யான் என உலக அரங்கில்



இந்தியாவின் பெருமைக்குக் காரணமான பல விண்வெளி ஆய்வுத் திட்டங்களில் பங்களித்த, தொடர்ந்து பங்களித்து வரும் நாராயணனின் தலைமையில் இஸ்ரோ உறுதியாகப் புதிய உயரங்களைத் தொடும்! நாராயணனின் பயணம் அவரைப் போல மேலும் பல தமிழ்நாட்டு மாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக ஊக்கமளிக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.